A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண்106 / 2022**

திரு செ. ரவிக்குமார்,
த/பெ. செல்லையா நாடார்,
எண், 17/184, காந்தி நகர்,
தெங்கம்புதூர், தெங்கம்புதூர் அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்.

………மேல்முறையீட்டாளர்
(Rep by திரு.V.S.R ஐயப்பன், வழக்கறிஞர்)

எதிர்

1. உதவி மின் பொறியாளர்/கீழகிருஷ்ணன்புதூர்,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கேளகிருஷ்ணன்புதூர் – 629 601.

2. செயற்பொறியாளர்/ இ&ப/ நாகர்கோவில்,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பார்வதிபுரம், நாகர்கோவில் – 629 003.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு K. ரமேஷ், உதவி மின் பொறியாளர்/கேளகிருஷ்ணன்புதூர்
திரு N.K. ஜவஹர் முத்து, செயற்பொறியாளர்/ இ&ப/ நாகர்கோவில்)

**மனு பெறப்பட்ட நாள்: 22-12-2022**

**கேட்புரை நாள்: 21-02-2023**

**ஆணை நாள்: 07-03-2023**

22.12.2022 அன்று பெறப்பட்ட திரு செ. ரவிக்குமார், த/பெ. செல்லையா நாடார், எண், 17/184, காந்தி நகர் , தெங்கம்புதூர், தெங்கம்புதூர் அஞ்சல் , கன்னியாகுமரி மாவட்டம் அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 106/2022 ஆக பதிவு

செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 16.02.2023 அன்று நடைபெற்றது . மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் , எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

<u>ஆணை</u>

1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை</u>

தனது வீட்டு மனை மீது செல்லும் மின் கம் பிகளை மாற்றி அமைக்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 <u>வழக்கின் சுருக்கம்:</u>

2.1 தனது வீட்டு மனை மீது செல்லும் மின் கம்பிகளை மாற்றி அமைக்குமாறு உதவி மின் பொறியாளர்/கீழ்கிருஷ்ணன்புதூர் அவர்களிடம் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கூறிய விண்ணப்பத்தி ற்கு DCW–இன்படி கட்டணம் செலுத்துமாறு எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளருக்கு தபால் மூலம் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே மின் கம்பிகளை மாற்றி அமைக்குமாறு மேல்முறையீட்டாளர் கன்னியாகுமரி மின்பகிர்மான வட்டம் , மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற த்தை 14.09.2022 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் , கன்னியாகுமரி மின்பகிர்மான வட்டம் , 05.11.2022 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது . மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 கன்னியாகுமரி மின்பகிர்மான வட்டம் , மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 05.11.2022 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது . அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*மனுதாரரின் வீட்டின் கூரை மேல் செல்லும் மின் பாதையை DCW முறையில் மாற்றியமைக்க 22.08.2022 அன்று பிரிவு அலுவலகத்தில் விண்ணப்பித்ததின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது. மதிப்பீட்டு கட்டணம் செலுத்துவதற்கு 15.09.2022 அன்று கைபேசி தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மதிப்பீட்டுக் கட்டணம் செலுத்த Lr.No.AE/JE/O&M/F.App.Tracking/D.No. 239/20 dated 15.09.2022 வாயிலாக 17.09.2022 அன்று பதிவு தபால் மூலம் கடிதம் அனுப்ப ப்பட்டுள்ளது. மதிப்பீட்டு கட்டணம் செலுத்தும் பட்சத்தில் மின் பாதை மாற்றியமைக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற மின் உரிமையாளரின் வாதம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.*

*எனவே மனுதாரர் மதிப்பீட்டு கட்டணம் செலுத்திய 3 தினங்களுக்குள் மின் பாதை யை மாற்றியமைக்க மின் பகிர்மான உரிமையாளருக்கு இம்மன்றம் உத்தரவிடுகிறது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை.</u>

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 21.02.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளருக்கு பதிலாக திரு.V.S.R ஐயப்பன், வழக்கறிஞர் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்

4.3 எதிர்மனுதாரர்கள் திரு K. ரமேஷ், உதவி மின்பொறியாளர் /கீழகிருஷ்ணன்புதூர் மற்றும் திரு N.K. ஜவஹர் முத்து , செயற்பொறியாளர்/ இ&ப/ நாகர்கோவில்,

கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதத்தை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது . குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள் , குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணி யாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:</u>

5.1 கன்னியாகுமரி மாவட்டம், தெங்கம்புதூர் அஞ்சல், தெங்கம்புதூர், காந்தி நகர், எண் 17/194 இல் வசிக்கும் திரு செல்லையா நாடார் அவர்களின் மகன் செ . ரவிக்குமார் மேற்கூறிய முகவரியில் வசித்து வருவதாகவும் , 146.014.752 மின் இணைப்பு கொண்ட தனது ம னையில் வீட்டின் கூரை மீ து மின்பாதை அமைக்கப்பட்டுள்ளதாகவும் கூரை அடிக்கடி பழுதாவதால் அதனை அகற்றி அவ்விடத்தில் சிமெண்ட் தளம் அமைப்பதற்கு மிகவும் இடையூறாக உள்ளதால் அம்மின்பாதையி னை மாற்றி அமைக்க சம்பந்தப்பட்ட பொறியாளர் அலுவலகத்திற்கு 13.08.2022 மற்றும் 22.08.2022 ஆகிய இரு தேதிகளில் நேரில் சென்றும் , பதிவு தபாலில் மனு செய்தும் , இது வரை நடவடிக்கையோ பதிலோ வழங்கப்படவில்லை எனவும் இத னால் தனது கட்டுமான பணி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மின்பாதை மாற்றி அமைத்திடுவதற்கான கட்டணம் செலுத்திட உறுதி கடிதம் அளித்தும் அதற்கான பதிவு கட்டணமும் 22.08.2022 (கன்னியாகுமரி மின்பகிர்மான , மின்கட்டண ரசீது வரிசை எண் –KK3 1258651 /நாள் 22.08.2022–12.67:10) இல் செலுத்தியும் எவ்வித நடவடிக்கையும் எடுத்திடாமல் கிடப் பில் உள்ளதால் பாதிக்கப்பட்ட தனக்கு இழப்பு வழங்கிட வேண்டி உத்தரவும் , கட்டணம் செலுத்த தயாராக இருந்தும்

உரிய காலத்தில் மாற்றி அமைத்திடாததால் நிர்வாகத்தின் முழுசெலவினத்தில் மாற்றி தருவதற்கு உத்தரவு வழங் குமாறும், மேலும் மின்பாதையை வேறு இடத்திற்கு மாற்றிட வேண்டி அளிக்கப்பட்ட மனுக்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்காமல் அலைகழிப்பு செய்யும் பொறியாளர் மற்றும் மன்ற தலைவர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மேல்முறையீட்டாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்:</u>

6.1 திரு. C. ரவிகுமார் எண்:17–184, காந்தி நகர், தெங்கம்புதூர் (அஞ்சல்) கன்னியாகுமரி மா வட்டம் – 629602 என்ற முகவரியில் இருந்து வீட்டு மனையில் கட்டிடம் கட்ட இடையூறாக இருக்கும் மின் இணைப்பு எண் எார்.146–014–752–ல் மின்னளவியை இடமாற்றம் செய்ய 05.08.2022 அன்று கீழகிருஷ்ணன்புதூர் விநியோக பிரிவு அலுவலகத்தில் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளதாகவும், மேற்படி விண்ணப்பத்தினை கீழகிருஷ்ணன்புதூர் விநியோக பிரிவு அலுவலகத்தில் தபால் பதிவேட்டில் பதிவு எண் 505 நாள் 05.08.2022 அன்று பதிவு செய்யப்பட்டதாகவும், மேற்படி விண்ணப்பத்தினை ஆராய்ந்ததில் இணைப்பு எண்.140–014–752 என்ற மின்னிணைப்பு திருமதி.சரோஜா, ஆத்திகாடு என்பவர் பெயரில் இருப்பது தெரிய வந்ததாகவும், மேற்படி மின்னிணைப்பில் உள்ள மின்னளவியை பாதுகாப்பு கருதியும், கருணை அடிப்படையிலும், மின்விபத்துக்கள் எதுவும் ஏற்படாத வண்ணம் பாதுகாக்கவும் மற்றும் திரு. C. ரவிக்குமார் அவர்கள் மின்னளவியை இடமாற்றம் செய்வ தற்கான கட்டணத்தையும் செலுத்தியதினால் மேற்படி மின்னளவியை இடமாற்றம் செய்து கொடுக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 இந்நிலையில் திரு.C.ரவிகுமார். எண்.17–184, காந்தி நகர், தெங்கம்புதூர் (அஞ்சல்) கன்னியாகுமரி மாவட்டம் 629 602 அவர்கள் 05.08.2022 அன்று கட்டிடம் கட்டுவதற்கு இடையூறாக இருக்கும் தாழ்வழுத்த மின்பாதையில் செல்லும் மின் கம்பியை மாற்றியமைத்து தரவேண்டி விண்ணப்பித்த விண்ணப்பம் கீழகிருஷ்ணன்புதூர் விநியோக பிரிவு அலுவலகத்தில் உள்ள தபால் பதிவேட்டில் பதிவு எண்.506 நாள் 05.08.2022 அன்று பதிவு செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 DCW (Deposit contribution work ) ன்படி 5,8,2022 அன்று பெறப்பட்ட விண்ணப்பத்தின்படி பதிவு கட்டணம் செலுத்த அறிவுறுத்தப்பட்ட பின்னரும் மனு காரர் 15.8.2022 அன்று வரை மேற் படி தொகையினை வாரிய கணக்கில் செலுத்தவில்லை . இந்நிலையில் மனுதாரருக்க பதிவு கட்டணம் செலுத்த வேண்டி க .எண். 213/இ.நி.பொ/கீ.கி.பி/கோ.கட்டு/2022 நாள் 16.8.2022 ன் படி பதிவு தபால் அனுப்பப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 பின்னர் மனுதாரர் திரு.C.ரவிகுமார் அவர்கள் ரசீது எண் TIK146RS1S15922 நாள் 22.8.2022 அன்று ரூ.118/– பதிவு கட்டணம் வாரிய கணக்கில் செலுத்தியுள் ளதாகவும், மேற்படி பதிவுகட்டணம் செலுத்தியதின் அடிப்படையில் கீழகிருஷ்ணபுதூர் பிரிவு அலுவலகத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு உதவி செயற்பொறியாளர்/விநியோகம்/கொட்டாரம் அவர்களின் ஒப்புதலுக்கு ERP வாயிலாக 29.8.2022 அன்று சமர்ப்பிக்கப்பட்ட தாகவும், உதவி செயற் பொறியாளர்/விநியோகம்/கொட்டாரம் அவர்கள் மேற்படி பணியாணையினை ஒப்பளிப்பு வழங்கிய பணியானை கீழகிருஷ்ணண்புதூர் விநியோக பிரிவு அலுவலகத்தில் 15.9.2022 அன்று கிடைக்கப்பெற்றதாகவும், இந்நிலையில் மேற்படி கோரிக்கை அறிவிப்பு (Demand Notice Lr.No.AE/JE/O&M/F.App Tracking/D.No.23020 Dated 15.09.2022) தொடர்பாக மதுதாரர் திரு.C.ரவிகுமார் அவர்களிடம் தொலை பேசி மூலமாக 15.09.2002 அன்றும் 16.09.2022 அன்றும் நகவல் தெரிவிக்கப்பட்ட பின்னரும் மனுதாரர். எந்த நடவடிக்கையினையும் மேற்கொள்ளாததால் 17.09.2022 அன்று கோரிக்கை அறிவிப்பு (Demand Notice ) மனுதாரருக்கு பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்டதாகவும், மேலும் கோரிக்கை அறிவிப்பு (Demand Notice) ல் உள்ள ஒப்புகை சீட்டினை மனுதாரர் இந்நாள் ரையிலும் கீழ்கிருஷ்ணன்புதூர் விநியோக பிரிவு அலுவலகத்தில் சமர்ப்பிக்கவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 இந்நிலையில் திரு.C.ரவிகுமார். எண்.17–184, காந்தி நகர், தெங்கம்புதூர் (அஞ்சல்), கன்னியாகுமரி மாவட்டம் 629 002 அவர்கள் 07.10.2022 அன்று மாலை மின்னிணைப்பு 146–014–752–இல் உள்ள மின்னளவியை இடமாற்றம் செய்ய வேண்டி மீண்டும் விண்ணப்பம் சமர்ப்பித்தார். விண்ணப்பம் அலுவலகத்தில் தபால் பதிவேட்டில்

பதிவு எண்.698 நாள் 07.10.2022 அன்று பதிவு செய்யப்பட்டதாகவும், மேலும் கா..361/இ.நி.பொ/கீ.கி.ப./கோ.கட்டு/2022 நாள் நாள் 12.10.2022–ன் படி மனுதாரருக்கு மின்னளவி கருவி இட மாற்றம் செய்ய வேண்டும் மினிணைப்பு எண்.146–014–752–ஐ கணினியில் ஆய்வு செய்ததில் மேற்படி மின்னிணைப்பு எண்ணானது திருமதி சரோஜா, ஆத்திகாடு என்பவரது பெயரில் இருந்து வருவது கண்டறியப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மேற்படி மின்னிணைப்பை தங்களுக்கு உரிமைப்பட்டது எனில் பெயர் மாற்றம் செய்வதற்கு அதற்குரிய ஆவணங்களை ஆன்லைன் (Online) ல் பதிவேற்றம் செய்து பதிவுக்கட்டணம் செலுத்தும் பட்சத்தில் தங்கள் பாதுகாப்பற்ற நிலையிலுள்ள தாழ்வழுத்து மின் கம்பியை போதிய இடைவெளி ஏற்படுத்தி தர கேட்டுக்கொண்ட விண்ணப்பத்தின் மதிப்பீட்டுக் கட்டணம் செலுத்தும் பட்சத்திலும், மின்கம்பியை போதிய இடைவெளி ஏற்படுத்தி மின் அளவி கருவி இடமாற்றம் வேண்டிய விண்ணப்பத்தின் மீது மேல் நடவடிக்கை எடுக்க ஏதுவாகும் என்பதை இளநிலை பொறியாளர்/விநியோகம்/ கீழகிருஷ்ணன்புதூர் அவர்களால் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 இதனை தொடர்ந்து திரு.C.ரவிகுமார், எண்.17–184, காந்தி நகர், தெங்கம்புதூர் (அஞ்சல்), கன்னியாகுமரி மாவட்டம் – 629 602 அவர்கள் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்திற்கு புகார் மனு எண்.1409221325146 நாள் 14.09.2022 ன்படி புகார் சமர்ப்பித்துள்தாகவும், மேற்படி புகார் மது தொடர்பான விசாரணை 05.11.2022 அன்று பொறி.M.P.பத்மகுமார், பி.இ., தலைவர், திருமதி.V.S.கிரிஜா, உறுப்பினர்–1, திரு.D.கோபாலகிருஷ்ணன் உறுப்பினர்–2 மற்றும் திரு.C.ரவிகுமார், S/o.செல்லையா நாடார், எண்.17–184– காந்தி நகர், தெங்கம்புதூர் (அஞ்சல்), கன்னியாகுமரி மாவட்டம் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்று ஆணை வழங்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 எனவே, திரு C.ரவிகுமார், S/o. செல்லையா நாடார் , எண் 17–184, காந்தி நகர் , தெங்கம்புதூர் (அஞ்சல்), கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் மேற்படி மதிப்பீட்டு

கட்டணம் செலுத்திய 3 தினங்களுக்குள் மின்பாதை மாற்றியமைக்கப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் கன்னியாகுமரி மாவட்டம் , தெங்கம்புதூர் அஞ்சல் , தெங்கம்புதூர், காந்தி நகர், எண் 17/194 இல் வசித்துவருவதாகவும் 146–014–752 மின் இணைப்புக் கொண்ட தனது வீட்டின் மேற்கூரை பழுதடைந்துள்ளதாகவும் அதனை மாற்ற வேண்டி உள்ளதால் கட்டிடம் கட்ட இடையூறாக இருக்கும் மின் இணைப்பு பலகையை இடம் மாற்றம் செய்யவும் , உயிருக்கு ஆபத்தான நிலையில் வேலை செய்பவர்களுக்கு இடையூறாக வீட்டின் மேற்கூரையின் மிக அருகில் செல்லும் தாழ்வழுத்த மின்பாதையை மாற்றி அமைத்துத் த ரவும் வேண்டி 5.8.2022 அன்று விண்ணப்பித்துள்ளார்.

7.3 05.08.2022 அன்று பெறப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் கள ஆய் வு செய்து தாழ்வழுத்த மின் பாதையை மாற்றியமைக்க DCW (Deposit Contribution Work)–இன்படி பதிவுக் கட்டணம் செலுத்த எதிர்மனுதாரர் அறிவுறுத்திய நிலையில் 15.08.2022 வரை மேல்முறையீட்டாளர் அப்பதிவு கட்டணம் செலுத்தாததை தொடர்ந்து 16.8.2022 அன்று எதிர்மனுதாரர் பதிவு தபா ல் மூலம் மீண்டும் அறிவுறுத்தியுள்ளார். மேல்முறையீட்டாளர் 22.8.2022 அன்று ரூ .118/– ஐ பதிவு கட்டணமாக வாரியக் கணக்கில் செலுத்தியுள்ளார். மேற்படி பதிவுக் கட்டணம் செலுத்தியதன் அடிப்படையில் பிரிவு அலுவலகத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஒப்புதலுக்காக சமர்ப் பிக்கப்பட்டு ஒப்பளிப்பு வழங்கிய பணியாணை 15.9.22 அன்று பிரிவு அலுவலகத்தில் கிடைக்கப் பெற்றுள்ளது.

7.4 இதனைத் தொடந்து 17.9.22 அன்று கோரிக்கை அறிவிப்பு (Demand Notice ) மேல்முறையீட்டாளரருக்கு பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது . மதிப்பீட்டுக் கட்டணம் செலுத்து ம் பட்சத்தில் மின் பாதை மாற்றியமைக்க மேல் நடவடிக்கை

எடுக்கப்படும் என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார் . இது சம்மந்தமாக தமிழ்நாடு மின் வழங்கல் விதி 5(6) ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"5. பல்வகைக் கட்டணங்கள் :*
*xxxx*
*xxxx*
*xxxx*
*6. மின் இணைப்பு / மின் தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் மாற்றல் கட்டணம் :*
*(1) "மின்னிணைப்பு / மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்கான கட்டணத்தை நுகர்வோரே ஏற்க வேண்டும் . மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே கட்டிவிட வேண்டும் . மதிப்பீட்டின் நகல் நுகர்வோருக்கு வழங்க வேண்டும் . அத்தொகை கட்டப்பட்ட பிறகே இடமாற்றப்பணி தொடங்கப்படும்."*

7.5 மேற்கூறிய விதியை ஆராயும்போது , பாதுகாப்பு கருதி மின்தொடர் / மின்பாதையை இடமாற்றம் செய்வதற்கான மதிப்பீட்டு த் தொகை மேல்முறையீட்டாளரையே சாரும் என்பது தெரிய வருகிறது . மேலும் மேல்முறையீட்டாளருக்கு 05.08.2022 அன்று DCW முறையில் மின்பாதையை மாற்றியமைக்க பதிவு கட்டணம் செலுத்த எதிர்மனுதாரர் அறிவுறுத்திய நிலையில் 22.08.2022 அன்று தான் மேல்முறையீட்டாளர் பதிவு கட்டணம் செலு த்தியது தெரிய வருகிறது . இதில் எதி ர்மனுதாரர் தரப்பில் சேவை குறைபாடு ஏதும் இருப்பதாக தெரியவில்லை . எனவே, மேல்முறையீட்டாளரின் சேவை குறைபாடு குறித்த கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

7.6 மேலும், பொறியாளர் மற்றும் மன்ற தலைவர் மீது ஒழுங்கு நடவடிக்கைக்கு உத்திரவிட கூறும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறைவிதிகள் , 2004–இன் படி மின் குறைதீர்ப்பாளருக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

7.7 மின் குறைதீர்ப்பாளரின் கேட்புரையின் போது மேல்முறையீட்டாளர் அத்தொகையினை செலுத்த ஒப்புக்கொண்டுள்ளார் . எனவே, மேல்முறையீட்டாளர் மதிப்பீட்டுத் தொகையை செலுத்தும்பட்சத்தில் அவருடைய வீட்டின் மேல் செல்லும் தாழ்வழுத்த மின் பாதையை வாரிய விதிப்படி மாற்றி தருவதற்கான உரி ய நடவடிக்கை எடுக்க எதிர்மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

## 8.0 <u>முடிவுரை :</u>

8.1 மேல்முறையீட்டாளரின் வீட்டின் மேல் செல்லும் தாழ்வழுத்த மின்பாதையை மாற்றியமைப்பதற்கு தமிழ்நாடு மின் பகிர்மான விதிமுறைகளின் படி உரிய தொகையை மேல்முறையீட்டாளர் செலுத்தும்பட்சத்தில் மின்பாதையை மாற்றியமைத்துத் தர எதிர்மனுதாரருக்கு உத்திரவிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 106/2022 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திரு செ. ரவிக்குமார், – By RPAD
த/பெ. செல்லையா நாடார்,
எண், 17/184, காந்தி நகர்,
தெங்கம்புதூர், தெங்கம்புதூர் அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்.

2. உதவி மின் பொறியாளர்/கீழகிருஷ்ணன்புதூர்,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கேளகிருஷ்ணன்புதூர் – 629 601.

3. செயற்பொறியாளர்/ இ&ப/ நாகர்கோவில்,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பார்வதிபுரம், நாகர்கோவில் – 629 003.

4. மேற்பார்வை பொறியாளர், – By Email
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பார்வதிபுரம், நாகர்கோவில் – 629 003.

5. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

7. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.